## கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை, தரம் 3-I (அ)க்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2017

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை, தரம் 3-I (அ)க்கு மாவட்ட ரீதியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காக **கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட தொழிலற்ற பட்டதாரிகளிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2017.08.21** ஆகும்.

**01. தகைமைகள் :**

1.1 **பொதுத் தகைமைகள் :**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
iii. 2017.08.21 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
iv. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக குறைந்தது ஒரு (01) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல்.

அல்லது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக குறைந்தது மூன்று வருடங்களாவது (03) தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்துவரும் ஒருவரை திருமணம் செய்து வேறு மாகாணத்திலிருந்து இம் மாகாணத்திற்கு வந்த ஒருவர் அது சம்பந்தமாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு:** பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கும் கடப்பாடுடையவர்களாக இருத்தல் வேண்டும்

**1.2 கல்வித் தகைமைகள் :**

1.2.1. இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக 2017.08.21 ஆந் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பிக்கும் பாடத்திற்கமைவான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

1.2.2. கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் க.பொ.த (சா/த) பரீட்சையிலும், க.பொ.த (உ/த) பரீட்சையிலும் கீழ்க் குறிப்பிட்டவாறு சித்தியடைந்திருத்தல் வேண்டும்

I. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் 03 திறமைச் சித்திகளுடன் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

II. க.பொ.த (உ/த) பரீட்சையில் (சாதாரண பொதுப்பரீட்சை தவிர்ந்த) அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.)

**குறிப்பு** : பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேசிய க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சை மற்றும் அவற்றிற்கு சமமான அங்கீகரிக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தி அடைந்தோரும் விண்ணப்பிக்க முடியும்.

பட்டச்சான்றிதழ், பட்டத்தின் பிரதான பாடங்களினை குறிப்பிடும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கடிதம் மற்றும் க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள் மட்டும் சான்றுறுதிப்படுத்தப்பட்டு, விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்புதல் கட்டாயமானதாகும். அவ்வாறு சான்றுறுதிப்படுத்தப்பட்டு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதோடு, இது தொடர்பாக பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடு எதுவும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

**02. ஆட்சேர்ப்பு முறையும் சேவை நிபந்தனைகளும் :**

2.1 **தொழிலற்ற பட்டதாரிகளிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, விண்ணப்பதாரர் தான் தொழிலற்ற பட்டதாரி என நிரூபிக்கும் சத்தியக்கடதாசி ஒன்றை / உறுதியுரை ஒன்றை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவர் நிரந்தரமாக வசிக்கும் பிரதேச**

**செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் மூலம் விண்ணப்பதாரர் தொழிலற்ற ஒருவர் எனவும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.**

2.2 இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுக்காக பிரயோகப்பரீட்சை நடாத்தப்படும். எழுத்துமூலப் போட்டிப்பரீட்சை மற்றும் பிரயோகப்பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசை ஒழுங்கிற்கு அமைவாக வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டம் மற்றும் பாடங்கள் அடிப்படையில் நியமனங்களை வழங்குவதற்கு நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தகுதியானோர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படுவர். (நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது)

2.3 வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களும் பாடங்களும் பின்வருமாறு.

| பாட இலக்கம் | பாடம் | மாவட்டங்களும் மொழி மூலமும் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திருகோணமலை | | | மட்டக்களப்பு | | | அம்பாறை | | |
| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| 01 | ஆரம்பக்கல்வி | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 02 | ஆங்கிலம் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | --- | --- |
| 03 | இரண்டாம் மொழி (தமிழ்) | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 04 | விஞ்ஞானம் | ✓ | ✓ | --- | --- | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 05 | கணிதம் | ✓ | ✓ | ✓ | --- | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 06 | சிங்கள மொழி | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 07 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) | ✓ | ✓ | ✓ | --- | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 08 | வரலாறும் குடியுரிமைக் கல்வியும் | --- | ✓ | ✓ | --- | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 09 | புவியியல் | ✓ | ✓ | ✓ | --- | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 10 | முயற்சியாண்மைக் கல்வி | --- | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 11 | வணிகக்கல்வியும் கணக்கீடும் | ✓ | --- | --- | --- | --- | ✓ | --- | --- | ✓ |
| 12 | கீழைத்தேய சங்கீதம் | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 13 | சித்திரக்கலை | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 14 | நாட்டியம் | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 15 | நாடகமும் அரங்கியலும் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 16 | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 17 | மனைப்பொருளியல் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 18 | சுகாதாரமும் உடற்கல்வியும் | ✓ | ✓ | ✓ | --- | ✓ | ✓ | ✓ | --- | ✓ |
| 19 | பொறியியற் தொழில்நுட்பவியல் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 20 | உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 21 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 22 | கணக்கீடு | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 23 | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 24 | பௌத்த நாகரிகம் | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- | --- |
| 25 | வழிகாட்டலும் ஆலோசனையும் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 26 | நூலக விஞ்ஞானம் | ✓ | ✓ | --- | --- | ✓ | --- | ✓ | ✓ | --- |
| 27 | இரண்டாம் மொழி (சிங்களம்) | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 28 | தமிழ் மொழி | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 29 | அரபு | --- | ✓ | --- | --- | --- | --- | --- | ✓ | --- |
| 30 | கர்நாடக சங்கீதம் | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 31 | நாட்டியம் (பரதம்) | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 32 | தமிழ் இலக்கியம் | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 33 | அரபு இலக்கியம் | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 34 | இணைந்த கணிதம் | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |
| 35 | விசேட கல்வி | --- | ✓ | --- | --- | ✓ | --- | --- | ✓ | --- |

**(“✓” எனும் குறியீடு வெற்றிடத்தையும், “----” எனும் குறியீடு வெற்றிடமின்மையையும் குறிக்கும்)**

2.4 விண்ணப்பதாரியினால் விண்ணப்பிக்கப்படும் பாடம் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றப்படமாட்டாது. அதே போன்று அது தொடர்பாக முன்வைக்கப்படும் மேன் முறையீடுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

2.5 மாவட்ட அடிப்படையில் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதனால் 10 ஆண்டுகள் முடிவடையும் வரை எவ்வகையிலும் இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. இது தொடர்பில் சேவை ஒப்பந்தமொன்று செய்து கொள்வது அவசியம் என நியமன அதிகாரி அல்லது நிர்வாக அதிகாரி தீர்மானிப்பின் அதற்கு உடன்படுதல் வேண்டும்.

2.6 அரச நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளுக்கும் கட்டுப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 25.02.2016 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 3/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை GE-1-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 27,740 – 300 x 6 – 380 x 7 – 445 x 2 – ரூபா. 33,090/- ஆகும். இச்சம்பள அளவுத்திட்டத்தின் 14 ஆவது படிநிலையில் பட்டதாரிகள் அமர்த்தப்படுவர். 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

2.7 இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.8 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 7.2.3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதோடு பதவியுயர்வுகள் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்படும். அதேபோன்று இந்த அறிவித்தலில் கருத்தில் கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அந்த சந்தர்ப்பம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்புடையதாகும்.

**03. விண்ணப்பிக்கும் முறை :**

3.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.3 தொடக்கம் 9.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

3.2 ஆங்கில மொழி மூலமான பாடங்களுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.

3.2.1. ஆங்கில மொழி மூலமான பட்டமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

3.2.2. விண்ணப்பதாரிகள் எழுத்துமூலப் போட்டிப்பரீட்சைக்கு ஆங்கில மொழி மூலமே தோற்ற வேண்டும்.

3.2.3. விண்ணப்பதாரிகள் தமது பிரயோகப்பரீட்சையை ஆங்கில மொழி மூலமே நிகழ்த்துதல் வேண்டும்.

3.2.4. ஆங்கில மொழி மூலமான பாடங்களுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரியொருவர் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மூலமான பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியாது.

3.3 **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், முழுமையுறாதவையும், சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3.4 அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்கான கல்வித்தகைமைகளை பார்வையிட்டு தங்களின் பட்டத்திற்குரித்தான பாடங்களுக்காக மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்களை தனித்தனியாக உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி வேறு வேறான கடித

உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு பாடங்களுக்காகவும் விண்ணப்பிக்கும்போது தனித்தனியாக விண்ணப்பிக்காது ஒரே விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்தாலோ, பற்றுச்சீட்டை தனித்தனியாக உரிய இடத்தில் ஒட்டப்பட்டிருக்காவிட்டாலோ அவ்விண்ணப்பப்படிவம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

3.5 இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 292,080/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவையைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.6 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2017 ஓகஸ்ட் மாதம் 21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

3.7 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/17/18** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

## 04. பரீட்சைக்கான அனுமதி :

4.1 விண்ணப்பங்களை அனுப்பி வைத்த அடிப்படைத் தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

4.2 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவரும் குறித்த பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டையின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி முதலாவது அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

குறிப்பு : **பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.**

## 05. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

## 06. பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதுடன், **விண்ணப்பதாரியினால் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தற்போது அரச சேவையொன்றில் உள்ளார் என்பது தெரியவரும் பட்சத்தில் அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்**.

**07. பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :**

இப்பரீட்சை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். அதில் சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தோர் சிங்கள மொழி மூலமும், தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தோர் தமிழ் மொழி மூலமும், ஆங்கில பாடம் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக விண்ணப்பித்தோர் ஆங்கில மொழி மூலமும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**08. பாடத்திட்டம் :**

**8.1 எழுத்துப்பரீட்சை :**

இந்தப் பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் இரண்டாகும். இந்த இரண்டு வினாப்பத்திரங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களை கொண்டமைந்ததாகக் காணப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த இரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் கட்டாயமானதாகும். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

**01.** உளச்சார்பு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆசிரியத் தொழிலுக்கான திறமையினையும் தர்க்க ரீதியான சிந்தனை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றை அளவீடு செய்யும் நோக்கில் இந்த வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**02.** பொது அறிவு – காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

ஆசிரியத்துறைக்கு இயைபுடைய அந்தத்துறை தொடர்பான பொது அறிவு அத்துடன் / அல்லது தேசிய ரீதியில் இடம்பெற்ற மற்றும் இடம் பெறுகின்ற கல்வியின் போக்கு சம்பந்தமான பொது அறிவு மற்றும் கல்வியினை நவீனமயமாக்கல் சம்பந்தமான பொது அறிவினைப் பரீட்சிப்பதற்காக பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை அளிக்கும் வகையில் 50 வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**8.2 பிரயோகப்பரீட்சை :**

நேர்முகப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்பரீட்சைக்காக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் 05 நிமிட சமர்ப்பிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| பிரயோக பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 01 நோக்கம் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 ஆளுமை மற்றும் நிர்வாகம் | 05 | 02 |
| 03 தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் | 05 | 02 |
| 04 நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | **25** | **10** |

**09. பரீட்சைக்கட்டணம் :**

9.1 பரீட்சைக்கட்டணம் ரூபா. 300/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணபத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

9.2 பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும் அல்லது www.ep.gov.lk என்ற கிழக்கு மாகாண இணையதளத்தில் வெளியிடப்படும்.

10. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| **நகரம்** | **நகர எண்** | **நகரம்** | **நகர எண்** |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

11. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

12. நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத சான்றிதழ்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

13. இந்த அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பிலும், ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பிலும், இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும், பட்டமொன்றின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பிலும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவுரைக்கமைய அச்செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

<u>அட்டவணை 01</u>

| பாட இலக்கம் | மொழி மூலம் | பாடம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | சிங்களம் | ஆரம்பக்கல்வி (Primary) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதேனுமொரு கலைமானிப்பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | சிங்களம் / தமிழ் | ஆங்கிலம் (English) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஆங்கில பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கில பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட ஏதேனுமொரு பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 03 | சிங்களம் | இரண்டாம் மொழி (தமிழ்) (Second Language – Tamil) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு சிங்கள மொழிமூலமான பட்டத்துடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தமிழ் பாடத்தில் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு சிங்கள மொழிமூலமான பட்டத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி (தமிழ்) பாடத்தில் விசேட (“A” அல்லது “D”) சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 04 | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் | விஞ்ஞானம் (Science) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல் விஞ்ஞானமானிப் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு விஞ்ஞானமானிப் பட்டத்துடன், க.பொ.த. (உ/த) உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயிரியல் பாடம் உள்ளடங்களாக 02 திறமைச்சித்திகளும் 01 சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். |
| 05 | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் | கணிதம் (Mathematics) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீக விஞ்ஞானமானிப் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது** |

| | | | |
|---|---|---|---|
| | | | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு விஞ்ஞான பட்டத்துடன், க.பொ.த. (உ/த) பௌதீக விஞ்ஞானப் பிரிவில் கணித பாடம் உள்ளடங்களாக 02 திறமைச்சித்திகளும் 01 சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். |
| 06 | சிங்களம் | சிங்கள மொழி (Sinhala Language) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிங்கள மொழி பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சிங்கள மொழி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 07 | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) | i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல் தொழில்நுட்ப பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். (செமஸ்டர்களில் (Semester) தகவல் தொழில்நுட்ப பாடம் மேலதிக / விருப்பத்திற்குரிய பாடமாக கற்றிருப்பின், அப்பாடங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது) |
| 08 | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் | வரலாறும் குடியுரிமைக் கல்வியும் (History & Civics) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வரலாறு அல்லது அரசியல் விஞ்ஞானம் பாடங்களில் ஒன்றைக்கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வரலாறு அல்லது அரசியல் விஞ்ஞானம் பாடங்களில் ஒன்றை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 09 | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் | புவியியல் (Geography) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து புவியியல் பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து புவியியல் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 10 | சிங்களம் / தமிழ் | முயற்சியாண்மைக் கல்வி (Entrepreneurship Education) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வியாபார நிர்வாகமானிப் (BBA) பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 11 | சிங்களம் / ஆங்கிலம் | வணிகக்கல்வியும் கணக்கீடும் (Business studies and Accounting) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வியாபார நிர்வாகமானி அல்லது முகாமைத்துவம் அல்லது கணக்கீடும் நிதியும் அல்லது வர்த்தக பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>** |
| 12 | சிங்களம் | கீழைத்தேய சங்கீதம் (Music – Oriental) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சங்கீத பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சங்கீதபாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட சங்கீத டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 13 | சிங்களம் / தமிழ் | சித்திரக்கலை (Art) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சித்திர பாடத்தினை கொண்ட நுண்கலைப் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சித்திரப்பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட ஏதேனுமொரு பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்திர பாடத்தில் குறைந்தது திறமைச்சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 14 | சிங்களம் | நாட்டியம் (Dancing) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நாட்டிய பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நாட்டிய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட நடனத்திற்கான டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 15 | சிங்களம் / தமிழ் | நாடகமும் அரங்கியலும் (Drama and Theatre) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | **அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நாடகமும் அரங்கியலும் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 16 | சிங்களம் | விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் (Agriculture and food Technology) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாய பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உணவுத் தொழில்நுட்பமும் / உணவும் போசனையும் / உணவு விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>** |
| 17 | சிங்களம் / தமிழ் | மனைப்பொருளியல் (Home Economics) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து மனைப்பொருளியல் பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து மனைப்பொருளியல் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உணவுத் தொழில்நுட்பமும் / உணவும் போசனையும் / உணவு விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>** |
| 18 | சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் | சுகாதாரமும் உடற்கல்வியும் (Health and Physical Education) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உடற்கல்வி பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உடற்கல்வி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட விளையாட்டு தொடர்பான டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | விளையாட்டுப்போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றிருத்தல் அல்லது தேசிய மட்டப்போட்டியில் முதலாமிடத்திலிருந்து ஐந்தாமிடத்திற்குள் ஏதாவதொரு இடத்தை பெற்றிருத்தல் அல்லது சர்வதேச ரீதியிலான போட்டியொன்றில் பங்கேற்றிருத்தல் |
| 19 | சிங்களம் / தமிழ் | பொறியியற் தொழில்நுட்பவியல் (Engineering Technology) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீகவியல் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பௌதீக விஞ்ஞான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 20 | சிங்களம் / தமிழ் | உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio Systems Technology) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாய விஞ்ஞான விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட உயிரியல் விஞ்ஞான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல் விஞ்ஞான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 21 | சிங்களம் / தமிழ் | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல் விஞ்ஞானம் / பௌதீக விஞ்ஞான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 22 | சிங்களம் / தமிழ் | கணக்கீடு (Accounting) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வர்த்தகம் / முகாமைத்துவம் / கணக்கீடும் நிதியும் தொடர்பான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணக்கீடு பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட ஏதேனுமொரு பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 23 | சிங்களம் / தமிழ் | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் (Communication & Media Studies) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட ஏதேனுமொரு பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 24 | சிங்களம் | பௌத்த நாகரிகம் (Buddhist Civilization) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த நாகரிகம் பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌத்த நாகரிகம் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட ஏதேனுமொரு பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 25 | சிங்களம் / தமிழ் | வழிகாட்டலும் ஆலோசனையும் (Guidance and Counselling) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உளவியல் / தத்துவம் / சமூகவியல் விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உளவியல் / தத்துவம் / சமூகவியல் பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட ஆலோசனை / உளவியல் / சமூகவியல் தொடர்பான டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 26 | சிங்களம் / தமிழ் | நூலக விஞ்ஞானம் (Library Science) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நூலக விஞ்ஞான பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட ஏதேனுமொரு பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதேனுமொரு பட்டத்துடன் இலங்கை நூலக சங்கத்தால் நடாத்தப்படுகின்ற நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானம் டிப்ளோமாவில் குறைந்த மட்டம் IIஐப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 27 | தமிழ் | இரண்டாம் மொழி (சிங்களம்) (Second Language – Sinhala) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதேனுமொரு தமிழ் மொழிமூலமான பட்டத்துடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சிங்கள பாடத்தில் சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதேனுமொரு தமிழ் மொழிமூலமான பட்டத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்கள) பாடத்தில் விசேட (“A” அல்லது “D”) சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 28 | தமிழ் | தமிழ் மொழி (Tamil Language) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ் மொழி பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ் மொழி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 29 | தமிழ் | அரபு (Arabic) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அரபு பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அரபு பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | **அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அல்-ஆலீம் இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்ததிற்கான சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும். |
| 30 | தமிழ் | கர்நாடக சங்கீதம் (Carnatic Music) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கர்நாடக சங்கீத பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கர்நாடக சங்கீத பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட கர்நாடக சங்கீத டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 31 | தமிழ் | நாட்டியம் (பரதம்) (Dancing - Bharata) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பரத நாட்டிய பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பரத நாட்டிய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட பரத நாட்டியத்திற்கான டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். |
| 32 | தமிழ் | தமிழ் இலக்கியம் (Tamil Literature) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ் இலக்கிய பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ் இலக்கிய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தமிழ் இலக்கிய பாடத்தில் விசேடசித்தியைக் பெற்றிருத்தல் வேண்டும். |
| 33 | தமிழ் | அரபு இலக்கியம் (Arabic Literature) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அரபு இலக்கிய பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது** |

| | | | |
|---|---|---|---|
| | | | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அரபு இலக்கிய பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் அரபு பாடத்தில் விசேடசித்தியைக் பெற்றிருத்தல் வேண்டும். |
| 34 | தமிழ் | இணைந்த கணிதம் (Combined Mathematics) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இணைந்த கணித விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இணைந்த கணித பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதீக விஞ்ஞான பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும். |
| 35 | தமிழ் | விசேட கல்வி (Special Education) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விசேட கல்வி பாடத்தினை கொண்ட விசேட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விசேட கல்வி பாடத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>**அல்லது**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனுமொரு பட்டத்துடன் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட விசேட கல்விக்கான டிப்ளோமாவொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். |

** - **கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் பாடங்களுக்கு உரித்தான வேறு பட்டங்கள்.**

இங்கு சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் அல்லது பொருந்தாத பட்சத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தல் மேலோங்கி நிற்கும் என்பதுடன், அவ்வாறன சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**EX/Rec/17/18**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

# கிழக்கு மாகாண மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை, தரம் 3-I (அ)க்கு மாவட்ட ரீதியாக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2017

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T**, சிங்களம் - **S**, ஆங்கிலம் - **E**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(10 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**நிரந்தர வதிவிட மாவட்டம் : ……………………………………………………………………………**

விண்ணப்பிக்கும் பாடம் : (அட்டவணை 01 இற்கு அமைவாக குறிப்பிடவும்)

| பாடம் | பாடத்திற்கான இலக்கம் |
|---|---|
| | |

---

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: Rev./Mr./Mrs./Miss./ ……………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உ.தா : PERERA, A.B.C) ……………………………………………………………………

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ……………………………………………………………………

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………………

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………………………………………

2.0. 2.1. நிரந்தர முகவரி : ……………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ……………………………………………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ……………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இலக்கம்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2017.08.21 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. இனம் : சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ முஸ்லிம் ☐ வேறு ☐
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. கல்வித்தகைமைகள் :

5.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் : ……………………… II. பரீட்சை சுட்டிலக்கம் : ………………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் : ……………………… II. பரீட்சை சுட்டிலக்கம் : ………………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.3 பட்டம் பற்றிய விபரம் :

5.3.1 பட்டம் : ..........................................................................................................................................
5.3.2 பல்கலைக்கழகத்தின் / நிறுவனத்தின் பெயர் : ......................................................................................
5.3.3 பட்டம் பெற்ற திகதி : ..........................................................................................................................
5.3.4 பட்டத்தின் பிரதான பாடம் / பாடங்கள் : ...................................................................................

5.4 டிப்ளோமா பற்றிய விபரம் :

5.4.1 டிப்ளோமா :......................................................................................................................................
5.4.2 நிறுவனத்தின் பெயர் : ..........................................................................................................................
5.4.3 டிப்ளோமா பெற்ற திகதி : ..................................................................................................................

6.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. ..........................................................................
..............................................................................................................................................

7.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

| |
|---|
| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |

**8.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இப்பதவிக்காக விண்ணப்பிக்கும் நான் தொழிலற்ற பட்டதாரியாவேன் என்பதை உறுதிப்படுத்துவதோடு, என்னால் விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், தற்போது அரச நிறுவனமொன்றில் சேவையாற்றுவது தெரியவரும் பட்சத்தில் அரச / கிழக்கு மாகாண அரச சேவையினால் எடுக்கப்படும் ஏதாவது தீர்மானத்திற்கு நான் இணங்குகின்றேன் என்பதையும் நான் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(இ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(உ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

.......................................
திகதி : ........................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

**9.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 3.5 இன்படி)
இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ..................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.........................................
திகதி : .......................... கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
பெயர் : ................................
பதவி : ..................................................................
முகவரி : ..............................................................
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)